RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 152 | ஜூன்.9 2026 செவ்வாய்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# நார்வே செஸ் 2026 வெற்றி: பிரக்ஞானந்தாவுக்கு தமிழக அரசு ரூ.50 லட்சம் ஊக்கத் தொகை

சென்னை: ஜூன்.9-

நார்வே செஸ் 2026 தொடரில் முதல் இந்தியராகப் பட்டத்தை வென்று வரலாற்றுச் சாதனை படைத்த கிராண்ட்மாஸ்டர் பிரக்ஞானந்தாவுக்கு ஊக்கத்தொகை ரூ.50 லட்சத்திற்கான காசோலையை முதல்வர் விஜய் வழங்கினார்.

இது குறித்து வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில்,"தமிழக முதல்வர் விஜய் இன்று தலைமைச் செயலகத்தில், நார்வே தலைநகர் ஆஸ்லோவில் நடைபெற்ற நார்வே செஸ் 2026 தொடரில் முதல் இந்தியராகப் பட்டத்தை வென்று, வரலாற்றுச் சாதனை படைத்த கிராண்ட்மாஸ்டர் ஆர்.பிரக்ஞானந்தாவுக்கு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் உயரிய ஊக்கத் தொகையான 50 லட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்.

அப்போது, கிராண்ட்மாஸ்டர் ஆர்.பிரக்ஞானந்தா நார்வே செஸ் 2026 தொடரில் வெற்றி பெற்றதற்காக வழங்கப்பட்ட கோப்பையைக் காண்பித்து வாழ்த்துப் பெற்றார்.

விளையாட்டுத் துறையில் தமிழ்நாட்டை இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக உருவாக்கிடும் வகையில், சர்வதேச மற்றும் தேசிய அளவிலான பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கு கொண்டு வெற்றி பெறும் வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல், பதக்கங்களை வெல்பவர்களுக்கு உயரிய ஊக்கத்தொகை வழங்குதல், விளையாட்டிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் என பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது.




அந்த வகையில், செஸ் கிராண்ட்மாஸ்டர் பிரக்ஞானந்தாவுக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலம் செயல்படுத்தப்படும் தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு உதவித்தொகைத் திட்டத்தின் (ணிலிமிஜிணி) கீழ் ஆண்டுதோறும் 30 லட்சம் ரூபாய் உதவித்தொகையாக வழங்கப்பட்டுவருகிறது.

முதல்வர் தலைமையின் கீழ், தமிழ்நாடு அரசு, விளையாட்டை ஒரு சக்திவாய்ந்த சமூக மாற்றக் கருவியாகக் கருதி செயலாற்றி வருகிறது. இளைஞர்களின் ஆற்றலை ஆக்கப்பூர்வமான வழியில் செலுத்தி, ஆரோக்கியமான வாழ்க்கை முறையை ஊக்குவித்து, சமூகத்தில் நேர்மறையான மாற்றத்தை உருவாக்குவதே அரசின் தலையாய நோக்கமாகும். தூய்மையான, நேர்மையான மற்றும் அறநெறி சார்ந்த விளையாட்டுக் கலாச்சாரத்தை வளர்த்தெடுப்பதில் தமிழ்நாடு அரசு உறுதிபூண்டுள்ளது.

அதனைச் செயல்படுத்தும் விதமாக தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மூலம், சென்னை, ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கத்தில் "ஹோம் ஆஃப் செஸ்" என்ற தனிப்பட்ட சதுரங்க அகாடமி நிறுவப்பட்டுள்ளது. இந்த அகாடமியின் மூலம் முறைப்படி பயிற்சி முகாம்களை நடத்துதல், வீரர்களின் செயல்திறனைக் கண்காணித்தல், சர்வதேச அளவிலான அனுபவத்தை வழங்குதல், நவீன கருவிகள் மற்றும் ஒத்திகை மென்பொருள்களின் மூலம் மேம்பட்ட பயிற்சி அளித்தல் போன்றவை வழங்கப்படுகிறது.

அத்துடன், மனவளப்பயிற்சி, முறையான திட்டமிடல் மற்றும் வீரர்களின் முழுமையான அறிவுத்திறன் வளர்ச்சிக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. இந்த முயற்சி அனைத்து வயதினரையும், குறிப்பாக இளம் வீரர்களை ஊக்குவித்து, சர்வதேச மாஸ்டர் (மிவி) மற்றும் கிராண்ட்மாஸ்டர் (நிவி) போன்ற உயரிய சதுரங்கப் பட்டங்களைப் பெற வழிவகை செய்வதை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது" இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மின்துறை ஹார்டு டிஸ்க் திருட்டு வழக்கை சிபிஐ விசாரிக்க அதிமுக கோரிக்கை

சென்னை: ஜூன்.9-

அதிமுக ஐடி விங்க் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "மின்துறையில் ஹார்டு டிஸ்க் திருடு போன வழக்கை ஏன் சிபிசிஐடியிடம் ஒப்படைக்கவில்லை என நாம் 3 நாட்கள் முன்பு கேள்வி எழுப்பியிருந்த நிலையில், தற்போது மிகவும் தாமதமாக சிபிசிஐடி விசாரணைக்கு உத்தரவிடப்ட்டுள்ளது.




இதற்கு எதற்கு இத்தனை நாட்கள்?. திருடு போன முதல் நாளே செய்ய வேண்டிய வேலையை ஏறத்தாழ ஒரு வாரம் தாமதம் செய்துள்ளதன் பின்னணி என்ன?. செய்திகளில் வரும் வரை இதுபற்றி அமைச்சர் நிர்மல் குமார் விளக்கம் தராமல் மறைத்து வைத்திருந்ததே பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது வெறும் ஹார்டு டிஸ்க் திருட்டு மட்டுமல்ல. தரவுகள் திருடப்பட்டிருக்கும் வாய்ப்புகள் மிக அதிகமாக உள்ளன. தரவுகள் திருட்டு பற்றி உங்கள் அரசின் காவல்துறையே விசாரிப்பதை இனிமேல் எப்படி நம்ப முடியும்?. நியாயமான விசாரணை நடத்தி உண்மை வெளிவர வேண்டும் எனில், அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கோரியபடி சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட வேண்டும்" எனத் தெரிவித்துள்ளார்.

## பழநி முருகன் கோயிலில் பக்தர்களிடம் குறைகளைக் கேட்டறிந்தார் அமைச்சர் ரமேஷ்

பழநி: ஜூன்.9-

பழநி முருகன் கோயிலில் செய்யப்பட்டுள்ள அடிப்படை வசதிகள் குறித்து பக்தர்களிடம் கருத்துக்களை கேட்டறிந்த அமைச்சர் எஸ்.ரமேஷ், அதிகாரிகளிடம் பல்வேறு கேள்விகளையும் எழுப்பினார்.

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் எஸ்.ரமேஷ், திங்கட்கிழமை (நேற்று) காலை பழநி தண்டாயுதபாணி சுவாமி கோயிலுக்கு வந்தார். அவரை, பழநி கோட்டாட்சியர் கண்ணன், கோயில் இணை ஆணையர் மாரிமுத்து உள்ளிட்ட அதிகாரிகள் வரவேற்றனர்.



தொடர்ந்து, பழநி கொடைக்கானல் சாலையில் ரூ.53 லட்சத்தில் அமைக்கப்பட்டுள்ள அலங்கார நுழைவு வாயில் மற்றும் மேற்கு ரத வீதியில் ரூ.52 லட்சத்தில் அமைக்கப்பட்டுள்ள ராக்கால நந்தவனத்தை அமைச்சர் எஸ்.ரமேஷ் திறந்து வைத்தார்.

இதையடுத்து, ரூ.100 கோடியில் நடைபெற்று வரும் பெருந்திட்ட வளர்ச்சிப் பணிகள் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை அமைச்சர் ஆய்வு செய்தார். அப்போது, வின்ச் ரயிலில் செல்ல வரிசையில் காத்திருக்கும் பக்தர்களுக்கு செய்யப்பட்டுள்ள குடிநீர், கழிப்பறை உள்ளிட்ட வசதிகள் குறித்து ஆய்வு செய்து, பக்தர்களிடம் குறைகளை கேட்டறிந்தார். பக்தர்கள் காத்திருக்கும் அறையில் நோய் பாதித்த நாய் இருந்ததை பார்த்து உடனே அப்புறப்படுத்த நகராட்சி சுகாதார பணியாளர்களுக்கு உத்தரவிட்டார்.

மேலும், வரிசையில் காத்திருக்கும் பக்தர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப கழிப்பறை எண்ணிக்கை குறைவாக இருப்பதால் கூடுதல் கழிப்பறை வசதிகளை ஏற்படுத்த உத்தரவிட்டார். தொடர்ந்து, பயன்பாடின்றி நிறுத்தி வைக்கப்பட்டுள்ள புதிய வின்ச் ரயிலை இயக்காதது குறித்தும் அதிகாரிகளிடம் கேள்வி எழுப்பினார். பஞ்சாமிர்தம் தயாரிப்பு மையத்தை ஆய்வு செய்து தயாரிக்கப்படும் பஞ்சாமிர்தம், விற்பனையாகும் பஞ்சாமிர்தம் குறித்து கேட்டறிந்தார்.

இதற்கிடையே, அமைச்சர் ஆய்வுக்கு வருவது குறித்தும், அலங்கார நுழைவு வாயில் மற்றும் நந்தவனம் திறப்பு விழா குறித்து பழநி தொகுதி அதிமுக எம்எல்ஏ ரவிமனோகரனுக்கு தகவல் தெரிவிக்காதது குறித்து அவரது ஆதரவாளர்கள் அமைச்சரிடம் புகார் தெரிவித்தனர். உடனே அமைச்சர், எனக்கு கொடுக்கும் மரியாதையை, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுதி எம்எல்ஏவுக்கும் கொடுக்க வேண்டும் என கோயில் இணை ஆணையரிடம் கண்டிப்புடன் தெரிவித்தார்.

தொடர்ந்து, எம்எல்ஏ ரவிமனோகரனை சந்தித்து அமைச்சர் வருத்தம் தெரிவித்து அவரை சமாதானப்படுத்தினார்.

பின்னர், ரோப் கார் மூலம் மலைக்கோயிலுக்கு சென்று அமைச்சர் சுவாமி தரிசனம் செய்தார். அங்கு பக்தர்களுக்கு செய்யப்பட்டுள்ள வசதிகள், அன்னதான கூடம், உணவு தயாரிக்கும் கூடத்தை அமைச்சர் ஆய்வு செய்தார். மாலையில் அனைத்து துறை அதிகாரிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நடத்த உள்ளார்.

## அண்ணாமலையின் 'வீ த லீடர்ஸ்' இயக்கத்தில் உறுப்பினர்களை சேர்க்க சிறப்பு முகாம்கள்

### 10 நாளில் 40 லட்சம் பேரை சேர்க்கும் பணி தீவிரம்

சென்னை: ஜூன்.9-

கிராமங்கள், நகரங்கள், மக்கள் அதிகம் கூடும் இடங்களில் அண்ணாமலையின் `வீ த லீடர்ஸ்' இயக்கத்தில் உறுப்பினர்களை சேர்க்க சிறப்பு முகாம்களை அவரது ஆதரவாளர்கள் நடத்தி வருகின்றனர்.

10 நாட்களில் 40 லட்சம் உறுப்பினர்களை இயக்கத்தில் இணைக்க தீவிர களப்பணியாற்றி வருகின்றனர். தமிழக பாஜகவின் முன்னாள் மாநிலத் தலைவர் அண்ணாமலை, அக்கட்சியிலிருந்து விலகி `வீ த லீடர்ஸ்' என்ற புதிய அரசியல் இயக்கத்தைத் தொடங்கியுள்ளார்.

இதையடுத்து, தமிழக பாஜகவில் முக்கியப் பொறுப்புகளில் வகித்து வந்த முன்னணி நிர்வாகிகள் பலரும், தங்களது பதவிகளை ராஜினாமா செய்துவிட்டு, தங்களது ஆதரவாளர்களுடன் கூட்டமாக அண்ணாமலையின் இயக்கத்தில் தங்களை இணைத்து வருகின்றனர்.

குறிப்பாக, கரு.நாகராஜன், சுமதி வெங்கடேசன் ஆகியோரைத் தொடர்ந்து, மாநில செயற்குழு உறுப்பினர் மனோகரன், மாநில செயலாளர் அலிசா அப்துல்லா உள்ளிட்ட பலரும் பாஜகவிலிருந்து விலகி வீ த லீடர்ஸில் இணைந்து வருகின்றனர்.

இந்நிலையில், அண்ணாமலையின் புதிய இயக்கம் உறுப்பினர் சேர்க்கையில் வேகத்தைக் காட்டி வருகிறது. அண்ணாமலை இயக்கம் தொடங்கிய முதல் 10 மணி நேரத்தில், 10 லட்சம் பேர் இணைந்தனர்.

மூன்றாவது நாளான நேற்று உறுப்பினர் சேர்க்கை 16 லட்சத்தைக் கடந்துள்ளது. இந்நிலையில் உறுப்பினர்கள் சேர்க்கையை மேலும் அதிகரிக்கச் சிறப்பு முகாம்களை அவரது ஆதரவாளர்கள் நடத்தி வருகின்றனர்.

இதுகுறித்து அண்ணாமலையின் இயக்கத்தில் இணைந்துள்ள முன்னாள் பாஜக மாநில செயற்குழு உறுப்பினர் மனோகரன் கூறுகையில், ``சென்னை மேற்கு மாவட்டத்திலிருந்து மட்டுமே பாஜக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் என 80 சதவீதம் பேர் கட்சியிலிருந்து விலகி, அண்ணாமலையின் இயக்கத்தில் இணைந்துள்ளோம்.

துடிப்பான ஓர் இளம் தலைமையை விரும்பி, இந்த இயக்கத்தை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள். `வீ த லீடர்ஸ்' இயக்கத்தில் இணைய கிராமப்புற மக்களும், பாமர மக்களும் மிகுந்த ஆர்வம் காட்டிவருகின்றனர்.

ஆனால் அவர்களுக்கு ஆன்லைன் மூலம் எவ்வாறு இணைவது என்று தெரியாததால், அவர்களின் வசதிக்காக அனைத்து கிராமப்புறங்களிலும் சிறப்பு உறுப்பினர் சேர்க்கை முகாம்களை நடத்த தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

அதேபோல், நகர்ப்புறங்களில் பொதுமக்கள் அதிகம் கூடும் முக்கிய இடங்களிலும் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட உள்ளன. ஏற்கெனவே பல இடங்களில் இந்த முகாம்கள் வெற்றிகரமாகத் தொடங்கப்பட்டுவிட்டன.

3 நாளில் உறுப்பினர்களின் எண்ணிக்கை 16 லட்சத்தைக் கடந்துள்ள நிலையில், அடுத்த 7 நாட்களில் மேலும் 20 லட்சம் பேர் இணைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே 10 நாட்களில் குறைந்தது 40 லட்சம் உறுப்பினர்களை இயக்கத்தில் சேர்க்க இலக்கு நிர்ணயித்து, நாங்கள் தீவிரமாகப் பணியாற்றி வருகிறோம்'' என்றார்.

## மின்வாரிய தலைமை அலுவலக ஹார்டு டிஸ்க் திருட்டு வழக்கு சிபிசிஐடிக்கு மாற்றம்

சென்னை: ஜூன்.9-

தமிழ்நாடு மின்சார வாரிய தலைமையகத்தில் இருந்து ஹார்டு டிஸ்க்குகள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை சிபிசிஐடிக்கு மாற்றப்பட்டுள்ளது. இதன்மூலம் இவ்வழக்கின் விசாரணை சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளது.

சென்னை, அண்ணாசாலையில் தமிழ்நாடு மின் வாரிய தலைமை அலுவலகத்தில் கம்ப்யூட்டர் பிரிவில் 34 ஹார்டு டிஸ்க்குகள் அண்மையில் திருடு போன சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்த விவகாரம் தொடர்பாக மின்வாரியம் சார்பில் சிந்தாதிரிப்பேட்டை காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது.




தமிழ்நாடு மின் வாரிய தலைமை அலுவலகத்தில் திருடுபோன 34 ஹார்டு டிஸ்க்குகளும், ரூ.75 ஆயிரத்துக்கு பெங்களூருவில் விற்பனை செய்யப்பட்டது தெரியவந்தது. அவற்றை வாங்கியவரையும் போலீஸார் கைது செய்துள்ளனர்.

போலீஸாரின் விசாரணையில் மின்வாரிய தலைமை அலுவலகத்தில் கம்ப்யூட்டர்களை மேற்பார்வையிடும் ஒப்பந்த ஊழியரான கோபிநாத் (31) என்பவர் கைது செய்யப்பட்டார். அவர் கம்ப்யூட்டர் ஹார்டு டிஸ்க்குகளை திருடி, பெங்களூருவில் உள்ள ஒரு காம்ப்ளக்ஸ் கடையில் விற்பனை செய்தது தெரியவந்தது. இதையடுத்து தனிப்படை போலீஸார் பெங்களூரு விரைந்து 34 ஹார்டு டிஸ்க்குகளையும் கைப்பற்றினர்.

கைதான கோபிநாத்திடம் விசாரித்தபோது, திருடிய ஹார்டு டிஸ்க்குகளில் உள்ள தகவல்களை அழித்துவிட்டு ரூ.75 ஆயிரத்துக்கு விற்பனை செய்ததாக தெரிவித்துள்ளார். அதில் சதி திட்டம் ஏதும் இல்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

இதற்கிடையே ஹார்டு டிஸ்க்குகளை வாங்கிய பெங்களூரு காம்ப்ளக்ஸ் கடை உரிமையாளர் கர்நாடகா மாநிலம், பெங்களூரு தெற்கு பகுதியைச் சேர்ந்த முரளி மனோகர் (32) கைது செய்யப்பட்டார்.

அவரிடமும் போலீஸார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில், சென்னை காவல்துறை, டிஜிபியிடம் பரிந்துரை செய்ததன்பேரில், இவ்வழக்கு சிபிசிஐடிக்கு மாற்றப்பட்டுள்ளது. இதன்மூலம் வழக்கு விசாரணை சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளது. பல்வேறு கோணங்களில் இவ்வழக்கின் விசாரணை நடைபெற உள்ளதாக கூறப்படுகிறது.



# கழக குடும்பங்களுக்கு ஆ.இராசா எம்.பி., ஆறுதல் தெரிவித்தார்

நீலகிரி, ஜூன்.9-

நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களுக்கு முன்பு திமுக கழக மூத்த நிர்வாகிகள் மாவட்ட பிரதிநிதிகள் மேலூர் கிருஷ்ணன், மயில்வாகனம் மற்றும், குன்னூர் நகரமன்ற தலைவர் சுசீலா கணவர் குன்னூர் நகர துணை செயலாளர் முருகேசன், கோத்தகிரி ஒன்றிய விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வினோத் தகப்பனார், மகளிர் அணி சகோதரி பூமணி கணவர் ஆகியோர் இயற்கை எய்தியிருந்த நிலையில், இவர்கள் இல்லங்களுக்கு திமுக கழக துணை பொதுச்செயலாளர் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா நேரில் சென்று படங்களுக்கு மலர் தூவி மரியாதை செலுத்தி, குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் தெரிவித்தார். உடன் மாவட்ட கழக பொறுப்பாளர் குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் கே.எம்.ராஜூ மாவட்ட அவை தலைவர் போஜன், மாவட்ட துணை செயலாளர் ரவிகுமார், தலைமை செயற்குழு உறுப்பினர் Expo செந்தில், மாநில சிறுபான்மை பிரிவு துணை செயலாளர் அன்வர்கான், மாநில விளையாட்டு அணி துணை செயலாளர் வாசிம்ராஜா, நகர ஒன்றிய செயலாளர்கள் ரமேஷ், ஜெகதீசன், பொதுக்குழு உறுப்பினர் செல்வம் உட்பட்ட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

# முடிச்சூரில் 300க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு வீரமங்கை வேலுநாச்சியார் விருதுகள் வழங்கி கௌரவிப்பு

முடிச்சூர், ஜூன்.9-

செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் அடுத்த முடிச்சூர் ஊராட்சி பகுதியில் உள்ள தனியார் பள்ளியில், முடிச்சூர் ஊராட்சி குடியிருப்போர் நல சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் சிறப்பாக தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு 16ஆம் ஆண்டு பாராட்டு விழா நடைபெற்றது.முடிச்சூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளைச் சேர்ந்த 300க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் இந்த நிகழ்ச்சியில் கௌரவிக்கப்பட்டனர். கல்வியில் சிறந்து



விளங்கிய மாணவர்களின் சாதனைகளை பாராட்டி, அவர்களுக்கு விருதுகள் மற்றும் நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன.இந்நிகழ்ச்சி முடிச்சூர் குடியிருப்போர் நல சங்கங்களின் கூட்டமைப்பு தலைவர் தாமோதரன் தலைமையில் நடைபெற்றது. இதில் பல்வேறு சமூக ஆர்வலர்கள், கல்வியாளர்கள், பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு மாணவர்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்தனர்.விழாவில் பேசிய சிறப்பு விருந்தினர்கள், மாணவர்கள் தொடர்ந்து கல்வியில் சிறந்து விளங்கி சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் பயனுள்ள குடிமக்களாக உருவாக வேண்டும் என அறிவுறுத்தினர். மேலும் மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு பெற்றோர்களும் ஆசிரியர்களும் தொடர்ந்து உறுதுணையாக இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினர். மாணவர்களின் கல்விச் சாதனைகளை ஊக்குவிக்கும் நோக்கில் ஆண்டுதோறும் இதுபோன்ற பாராட்டு விழாக்கள் நடத்தப்படுவது இந்த ஆண்டு இந்த நிகழ்ச்சி 16ஆம் ஆண்டாக தொடர்ந்து நடைபெற்று வருகிறது வரவேற்கத்தக்க முயற்சி என பொதுமக்கள் தெரிவித்தனர்.300க்கும் மேற்பட்ட மாணவர்களை ஒரே மேடையில் கௌரவித்து அவர்களின் எதிர்கால கல்விப் பயணத்திற்கு ஊக்கமளித்த இந்த விழா, முடிச்சூர் பகுதியில் பெரும் வரவேற்பைப் பெற்றது.



# வெலிங்டன் அருள்மிகு ஸ்ரீமுனீஸ்வரர் திருக்கோவில்38 ஆம் ஆண்டு திருவிழா

நீலகிரி, ஜூன்.9-

வெலிங்டன் அருள்மிகு ஸ்ரீமுனீஸ்வரர் திருக்கோவில் 38 ஆம் ஆண்டு திருவிழா 07062026 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை கொடியேற்றத்துடன் துவங்கி பரிவார தெய்வங்கள் மூலவர் மஹா அபிஷேகம் மஹா தீபாராதனை சதுர்வேதம் மந்திர புஷ்பம் மாகேஸ்வரபூஜை என பூஜைகள் மிக சிறப்பாக நடைபெற்றது. அதனை தொடர்ந்து பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.இரவு மறு பூஜையுடன் திருவிழா இனிதே நிறைவடைந்தது. திருவிழாவில் பக்தர்கள் திரளாக கலந்து கொண்டு அருள்மிகு ஸ்ரீமுனிஸ்வரர் தரிசனம் பெற்றனர்.



# கொள்ளுமேடு கிராமத்தில் பொதுமக்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கல்

மாதவரம், ஜூன்.9-

மாதவரம் தொகுதி சென்னை வடகிழக்கு மாவட்டம் வில்லிவாக்கம் வடக்கு ஒன்றியம் வெள்ளானூர் ஊராட்சி கொள்ளுமேடு திமுக சார்பில் மறைந்த முன்னாள் தமிழ்நாடு முதல்வர் டாக்டர் மு.கருணாநிதியின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு பொதுமக்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி வெள்ளானூர் ஊராட்சி மன்ற அலுவலகம் அருகில் திமுக கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை ஒன்றிய அமைப்பாளரும் கொள்ளுமேடு கிளைக் கழகச் செயலாளருமான கழக ராஜா (எ) மா.சு. புனிதவேல் தலைமையில் நடைபெற்றது.ஒன்றிய பிரிதிநிதி செந்தில்குமார் அனைவரையும் வரவேற்றார். வெள்ளானூர் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவரும் மாவட்ட பிரதிநிதியுமான பிரபாகரன், மாவட்ட துணைச் செயலாளர் கரலபாக்கம் ராஜேந்திரன், ஒன்றிய துணைச் செயலாளர் ராம்தாஸ் ஆகியோர் முன்னிலை வகித்தார். நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக வில்லிவாக்கம் வடக்கு ஒன்றிய திமுக செயலாளர் மோரை கோ.தயாளன் கலந்து கொண்டு கட்சி கொடியேற்றி அன்னாரின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.பின்னர் பொதுமக்களுக்கு இனிப்புடன் அறுசுவை அன்னதானத்தை துவக்கி வைத்தார். இதில் கொள்ளுமேடு திமுக அவைத்தலைவர் ராஜேந்திரன், துணைச் செயலாளர் சுராஜ், இணைச் செயலாளர் சுமதிஜெயபால், ஒன்றிய பிரதிநிதி சரஸ்வதிசரவணன், லோகேஷ், பொருளாளர் தர்மராஜ், வெள்ளானூர் கவர்னர், இளைஞர் அணி வினோத்குமார், மாரி, கருணா, ஜோஷ், ஒசிஎஃப் ராஜேந்திரன், மணி, குமார், எல்லப்பன், கோவிந்தசாமி, முருகேசன், குமார், அருள்தாஸ், சுந்தர், அரவிந்தன், சாமிநாதன், கஜலட்சுமி, அருள்மொழி, முரளி, சுற்றுச்சூழல் மாவட்ட அணி துணை அமைப்பாளர் வேதா செந்தில், ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஸ்டீபன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



# உலக அமைதி வேண்டி நற்கருணை ஆராதனை பவணி

கிருஷ்ணகிரி, ஜூன்.9-

உலக அமைதியும் சமாதானமும் நிலவ வேண்டி கிருஷ்ணகிரி தூய பாத்திமா அன்னை திருத்தலத்தில் சிறப்பு நற்கருணை ஆராதனை பவணி நடைபெற்றது. பங்குத்தந்தை அருள்ராஜ் தலைமையில் நடைபெற்ற இந்த பவணி சாந்தி நகர் மாதா இருதய சபை கன்னியர் மடத்தில் தொடங்கி, புனித அன்னாள் மேல்நிலைப்பள்ளி வழியாக திருத்தலத்தை வந்தடைந்தது. இதில் சிறப்பு திருப்பலி, நற்கருணை ஆராதனை மற்றும் ஆசீர்வாதம் வழங்கப்பட்டது. கிருஷ்ணகிரி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த திரளான கிறிஸ்தவ மக்கள் பங்கேற்றனர்.

# காவேரிப்பட்டணம் காவல் நிலையத்தில் புதிய இன்ஸ்பெக்டர் பொறுப்பேற்பு

ஓசூர், ஜூன்.9-

ஓசூர் டவுன் காவல் நிலைய இன்ஸ்பெக்டராக பணியாற்றி வந்த வே. சங்கர், காவேரிப்பட்டணம் காவல் நிலைய இன்ஸ்பெக்டராக மாற்றப்பட்டு புதிய பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.



பொறுப்பேற்ற அவருக்கு காவல்துறை அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.

சட்டம்ஒழுங்கை மேம்படுத்தவும், பொதுமக்களுக்கு சிறந்த சேவையை வழங்கவும் உறுதிபூண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.



# ஸ்ரீ வலம்புரி பால விநாயகர் ஆலயத்தில் மஹா கும்பாபிஷேகம் விழா

மாதவரம். ஜூன்.9-

மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் தீர்த்தக்கிரியம்பட்டு ஊராட்சி அத்திவாக்கம் கோட்டூர் கிராமம் பால விநாயகர் நகரில் பக்தர்களுக்கு அருள்பாளித்து கொண்டு இருக்கும் அருள்மிகு ஸ்ரீ வலம்புரி பால விநாயகர் ஆலயத்தில் புனராவர்த்தன அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் விழா சிறப்பு அழைப்பாளர் ஆர்.ஜெயக்குமார், ஆலய தலைவர் ராஜி, செயலாளர் சங்கர், பொருலாளர் ராமன், துணைத்தலைவர் மணிகண்டன், துணை செயலாளர்கள் லட்சுமணன், துர்காதாஸ் மற்றும் ஆலய பொறுப்பாளர்கள், கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் வெகு சிறப்பாக நடைபெற்றது.நிகழ்ச்சியில் விக்னேஷ்வரபூஜை, தம்பதியர்பூஜை, சுமங்கலி பூஜை, கன்னியபூஜை, தனபூஜை, வர்னபூஜை, வாஸ்துசாந்தி, கலச ஆவாஹனபூஜை, இந்திரபூஜை, பூர்ணாஹூதி, வேதபாராயணம், கலசபூஜை, நாடிசந்தானம், தத்துவார்ச்சனை, யாகசாலை பூஜை மற்றும் சிறப்பு ஹோமங்கள் நடைபெற்றது. பின்னர் யாகசாலையில் சிறப்பு பூஜைகள் செய்யப்பட்ட புனிதநீர் கலசங்களை மேளதாளத்துடன் கொண்டு சென்று ஆலய விமானம், மூலவர் மற்றும் பரிவார தெய்வங்களுக்கு மஹா கும்பாபிஷேகம் செய்து தீபாராதனை காண்பிக்கப்பட்டது. இதனைத்தொடர்ந்து பக்தர்கள் மீது புனிதநீரை தெளித்தனர். மேலும் மூலவர் மற்றும் பரிவார தெய்வங்களுக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு தூபதீப ஆராதனை காண்பிக்கப்பட்டது. இவ்விழாவிற்கு சுற்றுவட்டார பக்தர்கள், கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் இவ்விழாவை முன்னிட்டு ஆலயம் சார்பில் பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கினர்.

# சிவகங்கை மாவட்டம்அனைத்து மாற்றுத்திறனாளிகளும் அரசு உதவிகள், சேவைகள் மற்றும் பயிற்சிகள் பெற தங்களது பகுதிகளுக்குட்பட்ட வட்டார சேவை மையங்களை அணுகி பயன்பெறலாம் மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, தகவல்

சிவகங்கை, ஜூன் .09-

சிவகங்கை மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தின் தமிழ்நாடு உரிமைகள் திட்டத்தின் கீழ் கடந்த 2025ஆம் ஆண்டு ஜீன் மாதம் முதல் தமிழ்நாடு உரிமைகள் திட்டம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. முதற்கட்ட பணியாக 160 முன்களப் பணியாளர்களை கொண்டு 16 வட்டாரங்களிலும் இல்லங்களுக்குச் சென்று கணக்கெடுப்புப் பணிகள் நடைபெற்றுவருகிறது. இதன் மூலமாக அனைத்து மாற்றுதிறனாளிகளையும் கண்டறிந்து பிரத்தியேக செயலியில் தரவு பதிவு செய்யப்பட்டு வருகின்றனர். அதனடிப்படையில், மாவட்டத்தில் சிவகங்கை மற்றும் காரைக்குடியில் உட்கோட்ட அளவிலான ஒருங்கிணைந்த மறுவாழ்வு சேவை மையங்கள் மற்றும் வட்டார அளவிலான ஒருங்கிணைந்த மறுவாழ்வு சேவை மையங்கள் செயல்பட்டு வருகிறது. அதில், தேவகோட்டை உட்கோட்ட அளவிலான ஒருங்கிணைந்த மறுவாழ்வு சேவை மையமானது, காரைக்குடி பழைய அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை வளாகத்திலும், சிவகங்கை உட்கோட்ட அளவிலான ஒருங்கிணைந்த மறுவாழ்வு சேவை மையமானது, சிவகங்கை பழைய அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை வளாகத்திலும், தேவகோட்டை வட்டார அளவிலான ஒருங்கிணைந்த மறுவாழ்வு சேவை மையமானது, தேவகோட்டை அரசு மருத்துவமனை வளாகத்திலும், காரைக்குடி வட்டார அளவிலான ஒருங்கிணைந்த மறுவாழ்வு சேவை மையமானது, காரைக்குடி (செஞ்சை) பழைய நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடத்திலும், கண்ணங்குடி வட்டார அளவிலான ஒருங்கிணைந்த மறுவாழ்வு சேவை மையமானது தேவகோட்டை ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்திலும், மானாமதுரை ஊரகமான வட்டார அளவிலான ஒருங்கிணைந்த மறுவாழ்வு சேவை மையமானது, முத்தனேந்தல்ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்திலும், மானாமதுரை நகரமான வட்டாரஅளவிலான ஒருங்கிணைந்த மறுவாழ்வு சேவை மையமானது, மானாமதுரை ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்திலும், திருப்புவனம் வட்டார அளவிலான ஒருங்கிணைந்த மறுவாழ்வு சேவை மையமானது, திருப்புவனம் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்திலும், காளையார்கோவில் வட்டார அளவிலான ஒருங்கிணைந்த மறுவாழ்வு சேவை மையமானது, காளையார்கோவில் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்திலும், திருப்பத்தூர் வட்டார அளவிலான ஒருங்கிணைந்த மறுவாழ்வு சேவை மையமானது, திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்திலும், இளையான்குடி வட்டார அளவிலான ஒருங்கிணைந்த மறுவாழ்வுசேவை மையமானது, இளையான்குடி ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்திலும், கல்லல் வட்டார அளவிலான ஒருங்கிணைந்த மறுவாழ்வு சேவை மையமானது, கல்லல் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்திலும் 31.01.2026 அன்று முதல் செயல்பட்டு வருகிறது. மேற்கண்ட மறுவாழ்வு சேவை மையங்களில் ஆலோசனை, இயன்முறை மற்றும் செயல்முறை சிகிச்சை, பேச்சு மற்றும் மொழித்திறன் பயிற்சி, கண்பரிசோதனை, பார்வைகுறைபாடு, செவித்திறன் குறைபாடுகள் மற்றும் அறிவுசார் குறைபாடுடையோர்கான சிறப்பாசிரியர்களைக் கொண்டு சேவைகள் மற்றும் பயிற்சிகள் வழங்கப்படுகிறது. உட்கோட்ட அளவிலான ஒருங்கிணைந்த மறுவாழ்வு சேவை மையங்கள் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரையும், வட்டார அளவிலான மையங்கள் காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணி வரையும் திங்கள் முதல் சனிக்கிழமை வரை வாரத்தில் ஆறு நாட்கள் (அரசு விடுமுறை நாட்கள் நீங்கலாக) செயல்பட்டுவருகிறது. எனவே மாவட்டத்திலுள்ள அனைத்து மாற்றுத்திறனாளிகளும் தங்களுக்கு தேவையான அரசு உதவிகள், மேற்படி சேவைகள் மற்றும் பயிற்சிகள் பெற தங்களது பகுதியில் உள்ள மேற்படி உட்கோட்ட, வட்டார சேவை மையங்களை அணுகி பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சியர் கா. பொற்கொடி, தெரிவித்துள்ளார்.



## "வாங்க கற்றுக் கொள்வோம்" விழிப்புணர்வு முகாம்

கிருஷ்ணகிரி, ஜூன்.9-
தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை சார்பில், ஜூன் 6 மற்றும் 7 ஆகிய நாட்களில் கிருஷ்ணகிரி மாவட்டத்தின் 8தீயணைப்பு நிலையங்களில் "வாங்க கற்றுக் கொள்வோம்" என்ற தலைப்பில் பொதுமக்களுக்கான விழிப்புணர்வு வகுப்புகள் நடைபெற்றன. தீ விபத்து மற்றும் பிற அவசரகாலங்களில் தற்காத்துக் கொள்வது குறித்து விளக்கங்கள் அளிக்கப்பட்டு, துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டன. மேலும், சிறப்பு மீட்பு தளவாடங்கள் பொதுமக்கள் பார்வைக்காக காட்சிப்படுத்தப்பட்டன.

## ஆற்காட்டில் சாலை மறியல்



ராணிப்பேட்டை, ஜூன்.9-
ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு அடுத்த கிருஷ்ணாபுரம் பகுதியில் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வரும் நிலையில் யாதவர் தெரு அருந்ததியர் தெரு மற்றும் கிருஷ்ணாபுரம் மையப்பகுதியில் உள்ள அனைத்து தெருக்களில் இருந்து மழைக்காலங்களில் மழை நீர் செல்லும் இடத்தில் தனிநபர் ஒருவர் அந்த இடத்தை மதில் சுவர் கட்டியதால் மழை காலத்தில் மழை நீர் செல்ல வழி இல்லாமல் ஊருக்குள்ளேயே தேங்கி நிற்பதாக குற்றச்சாட்டை எழுந்துள்ளது. இதனால் அப்பகுதியில் மழைநீர் தேங்கி துர்நாற்றம் வீசி வருவதாகவும் கொசுக்கள் அதிகரித்து வருவதாகவும் அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டி வருகின்றனர். எனவே மழை காலங்களில் மழை நீர் செல்வதற்காக கால்வாய் அமைத்து தருமாறு சாலை மறியலில் ஈடுபட்டனர். தகவல் அறிந்த மாவட்ட துணை கண்காணிப்பாளர் கனகராஜ் உத்தரவின் பெயரில் கிராமிய போலீசார், பி டி ஒ ரவி, வருவாய் ஆய்வாளர் விசாகரன், கிராம நிர்வாக அலுவலர் கபிலன் உள்ளிட்டோர் விரைந்து வந்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு சமரசம் செய்தனர் இதனால் பகுதியில் பொது மக்களுக்கும் போலீசாருக்கும் தள்ளு முள்ளு ஏற்பட்டது இதனால் சுமார் மூன்று மணி நேரத்திற்கு மேலாக பரபரப்பு ஏற்பட்டது.

## சாலைப் பணிகளை உடனடியாக தொடங்கக் கோரி ஆட்சியரிடம் கிராம மக்கள் மனு



மதுரை, ஜூன்.9-
மதுரை மாவட்டம், பேரையூர் தாலுக்கா, பாப்பிநாயக்கன்பட்டி கிராமத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. இதில் சுமார் 300 குடும்பங்களில் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகள் வசித்து வருகின்றனர். இந்நிலையில், சங்கரலிங்கபுரம் முதல் சூலப்புரம் வரை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக அமைக்கப்பட்டு வந்த சாலைப் பணிகள், தனிநபர் ஆக்கிரமிப்பு தொடர்பான பிரச்சினையால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இது தொடர்பாக நீதிமன்றத்திலும் வழக்கு தொடரப் பட்டுள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் பொதுமக்கள் கடும் சிரமத்துக்கு உள்ளாகி வருவதாகக் கூறிய கிராம மக்கள், நிறுத்தப்பட்டுள்ள சாலைப் பணிகளை மீண்டும் தொடங்கி, முழுமையாக சாலையை அமைத்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி, மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்தனர். இந்த மனு அளிக்கும் நிகழ்வில் பாப்பிநாயக்கன்பட்டி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு தங்களது கோரிக்கையை முன்வைத்தனர்.

## மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் டி.சரத்குமார் பிறந்தநாளையொட்டி சிறப்பு வழிபாடு மற்றும் பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்கி கொண்டாட்டம்





தாம்பரம், ஜூன்.9-
செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் தமிழக மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் டாக்டர் டி.சரத்குமார் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, தாம்பரத்தில் அமைந்துள்ள அருள்மிகு நாகேஸ்வரி அம்மன் ஆலயத்தில் இன்று சிறப்பு வழிபாடு நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு செங்கல்பட்டு வடமேற்கு மாவட்ட தமிழக வெற்றி கழக துணைச் செயலாளர் வரலட்சுமி (எ) ஷீபா பிரேம் தலைமையேற்று ஏற்பாடுகளை செய்திருந்தார். அமைச்சர் டி. சரத்குமார் அவர்களின் நீண்ட ஆயுள், நல்ல உடல்நலம் மற்றும் மக்கள் பணியில் தொடர்ந்து சிறப்பாக செயல்பட இறைவனை வேண்டி சிறப்பு அர்ச்சனை மற்றும் பூஜைகள் நடத்தப்பட்டன. இதனைத் தொடர்ந்து, அமைச்சர் பிறந்த நாளை முன்னிட்டு கேக் வெட்டி கொண்டாடப்பட்டது. பின்னர் பொதுமக்கள், கட்சியினர் மற்றும் ஆலயத்திற்கு வந்திருந்த பக்தர்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் தமிழக வெற்றி கழக நிர்வாகிள மாவட்ட இணைச்செயலாளர் விஜய் தியாகு, பகுதி செயலாளர்கள் பிரவீன், சுந்தர், மணி, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் சுபாஷ், டில்லி பாபு, 55வது வார்டு இளைஞரணி அமைப்பாளர் விக்னேஷ், தரணி, கோகுல கண்ணன், மாவட்ட மகளிர் அணி நிர்வாகி பூங்கோதை, அஸ்வினி, மகாலட்சுமி, பிரவீனா, லட்சுமி, ராஜேஸ்வரி, திவ்யா, சினேகா ம ற்றும் தமிழக வெற்றி கழக நிர்வாகிகள் மகளிர் அணி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## பல்லாவரம் 13வது வார்டு திமுக சார்பில் கலைஞரின் 103வது பிறந்த நாளை முன்னிட்டு மாணவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது





பல்லாவரம், ஜூன்.9-
செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி உட்பட்ட பல்லாவரத்தில் செம்மொழி நாயகர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாளை முன்னிட்டு, பல்லாவரம் வடக்கு பகுதி 13வது வட்ட திமுக சார்பில் மாணவர்களுக்கான நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா பல்லாவரம் காமராஜர் நகர் சர்வீஸ் சாலையில் நடைபெற்றது. 13 வது வார்டில் வசிக்கும் அரசு பள்ளி, அரசு உதவி பெறும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு நோட்டு புத்தகங்கள் மற்றும் பள்ளிப்பைகள் வழங்கப்பட்டது மற்றும் 10ஆம் வகுப்பு 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் முதல் ஏழு இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கும் கல்வி உதவித்தொகை வழங்கி கவுரவிக்கப்பட்டனர். விழாவிற்கு வட்ட செயலாளர் பரமசிவம் தலைமை தாங்கினார். மாநகர பிரதிநிதி கருணாமூர்த்தி மற்றும் தாம்பரம் மாநகர வர்த்தக துணை அமைப்பாளர் வீடியோ பி.ஹரி ஆகியோர் வரவேற்புரையாற்றினர். வட்ட அவைத்தலைவர் புருஷோத்தமன், வட்ட பிரதிநிதிகள் பதி, செல்வம், குமார், பெருமாள், ஆனந்த், வட்ட பொருளாளர் ஜோசப் பிரதீப், வட்ட துணை செயலாளர்கள் ராஜேந்திரன், உமாபதி, புஷ்பராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் மாவட்ட துணை செயலாளரும் முன்னாள் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினருமான இ.கருணாநிதி, தாம்பரம் மாநகராட்சி மண்டல தலைவரும் பல்லாவரம் வடக்கு பகுதி செயலாளருமான இ.ஜோசப் அண்ணாதுரை, மாமன்ற உறுப்பினர் ரேணுகாதேவி பரமசிவம் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு மாணவர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர். நிகழ்ச்சியில் மாவட்ட பிரதிநிதி ரமேஷ், பகுதி துணை செயலாளர் சிவகுமார், பகுதி கழக நிர்வாகிகள் வட்டக் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள், இளைஞர் அணி மற்றும் மாணவர்கள், பெற்றோர்கள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



## ஜெகதாப் அரசினர் உயர்நிலைப்பள்ளி தொடர்ந்து மூன்றாவது ஆண்டு 100% தேர்ச்சி

கிருஷ்ணகிரி, ஜூன்.9-
கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் ஒன்றியத்திற்குட்பட்ட ஜெகதாப் அரசினர் உயர்நிலைப்பள்ளி, பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக 100 சதவீத தேர்ச்சி பெற்று சாதனை படைத்துள்ளது. தனியார் பள்ளிகளுக்கு இணையான தரமான கல்வி, ஒழுக்கம் மற்றும் மாணவர்களின் தொடர்ச்சியான முயற்சி இந்த வெற்றிக்கு காரணமாக அமைந்துள்ளது. அருகிலுள்ள மேல்நிலைப்பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள், ஜெகதாப் பள்ளி மாணவர்கள் கல்வி, ஒழுக்கம் மற்றும் பண்புகளில் சிறந்து விளங்குவதாக பாராட்டியுள்ளனர். பள்ளியின் தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு, மாலை நேர சிறப்பு வகுப்புகள் மற்றும் தொடர் பயிற்சிகள் மாணவர்களின் கல்வித் திறனை மேம்படுத்தியுள்ளதாக தெரிவிக் கப்பட்டுள்ளது. இந்த தொடர்ச்சியான சாதனையால் பள்ளியின் மாணவர் சேர்க்கை அதிகரித்து வருவதுடன், பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் பள்ளி நிர்வாகம் மற்றும் ஆசிரியர்களுக்கு வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துள்ளனர். "அரசு பள்ளியிலும் தனியார் பள்ளிகளுக்கு இணையான சிறந்த கல்வி முறை" என்பதை ஜெகதாப் பள்ளி மீண்டும் ஒருமுறை நிரூபித்துள்ளது.



■ திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி பகுதியை சார்ந்த பத்திரிகையாளர் இ.ஆனந்தகுமார், பத்திரிக்கை துறையில் சில ஆண்டுகளாக மிகவும் சிறப்பாக தன்னுடைய பணியை ஆற்றிவருவதை ஒட்டி தற்போது ஊடக மக்கள் முன்னேற்றக் கழகத்தின் நிறுவன தலைவர் வி.எம்.தமிழன் வடிவேல் அவர்களால் மாநில இளைஞர் அணி தலைவராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். இதனைத் தொடர்ந்து பல்வேறு கட்சிகளை சார்ந்த நிர்வாகிகளும் பத்திரிக்கையாளர்களும் தங்களது வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர். என்னை மாநில இளைஞர் அணி தலைவராக நியமனம் செய்த வி.எம். தமிழன் வடிவேல் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றயை தெரிவித்துக் கொள்கிறேன்.



■ தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr.B.சினேஹா ப்ரியா, தலைமையில் இரவு மாவட்ட காவல்துறையினர் தேனி மாவட்டம் முக்கிய பகுதிகளில் தீவிர நடை ரோந்து (Foot Patrol) பணியில் ஈடுபட்டனர். பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்தல், குற்றச் செயல்களைத் தடுத்தல், சட்டம் மற்றும் ஒழுங்கை பேணுதல் ஆகிய நோக்கங்களுடன் மேற்கொள்ளப்பட்ட இந்த நடை ரோந்து பணியின் மூலம் திருட்டு, வழிப்பறி, சமூக விரோத செயல்கள் உள்ளிட்ட குற்றங்களை முன்கூட்டியே தடுத்து, சட்டம் மற்றும் ஒழுங்கை பராமரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## மதுரையில் யூடியூபர் மாரிதாஸ் கைது: சென்னை சைபர் கிரைம் அதிரடி

மதுரை, ஜூன்.9-
மதுரையில் யூடியூபர் மாரிதாஸை, சென்னை சைபர் கிரைம் போலீசார் இன்று காலை அதிரடியாக கைது செய்தனர். மதுரையில் உள்ள சூரியா நகரைச் சேர்ந்தவர் மாரிதாஸ், பிரபல யூடியூபர். பாஜவின் தீவிர ஆதரவாளரான இவர், தமிழ்நாட்டில் புதிதாக பொறுப்பேற்றுள்ள தமிழக வெற்றி கழக அரசையும், முதல்வர் விஜய் மற்றும் அமைச்சர்கள் குறித்தும், அரசின் செயல்பாடுகள் குறித்தும் விமர்சித்து வீடியோக்களை வெளியிட்டு வருகிறார். தொடர்ந்து தமிழ்நாடு அரசை விமர்சித்து வருகிறார். இந்த நிலையில், சென்னை மாநகர சைபர் கிரைம் போலீசார், அவருக்கு எதிராக பல்வேறு பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது. இதன்படி, சென்னையிலிருந்து இன்று காலை மதுரைக்கு வந்த சென்னை சைபர் கிரைம் தனிப்படை போலீசார், மதுரை மாநகர காவல் துறையுடன் இணைந்து சூரியா நகரில் உள்ள மாரிதாஸின் வீட்டிற்கு சென்றனர். அங்கு மாரிதாஸை கைது செய்து காவல்துறை வாகனத்தில் சென்னைக்கு அழைத்துச் சென்றனர்

## பழனியில் அமைச்சர் ரமேஷின் 'அதிரடி' பாணி: பஞ்சாமிர்த குடோன் ஆய்வு முதல் அதிகாரிக்கு டோஸ் வரை!



திண்டுக்கல், ஜூன்.9-
திண்டுக்கல் மாவட்டம் பழனி முருகன் கோவிலுக்கு இன்று வருகை தந்த இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷ், கோவில் கட்டிடங்கள் மற்றும் பல்வேறு பகுதிகளில் தீவிர ஆய்வு மேற்கொண்டார். அப்போது, பக்தர்கள் சாமி தரிசனத்திற்காக வரிசையில் நின்றுகொண்டிருந்த பகுதியில், நாய் ஒன்று சுற்றித் திரிவதை அமைச்சர் கவனித்தார். பக்தர்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு, உடனடியாக நகராட்சி ஆணையரை போனில் அழைத்த அமைச்சர், அடுத்த 10 நிமிடத்திற்குள் அங்கிருக்கும் அனைத்து நாய்களையும் பிடிக்க வேண்டும் என அதிரடி உத்தரவு பிறப்பித்தார். அமைச்சரின் உத்தரவைத் தொடர்ந்து, சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த நகராட்சி ஆணையர், ஊழியர்களைக் கொண்டு உடனடியாக அங்கிருந்த நாய்களைப் பிடித்து அப்புறப்படுத்தினார்இதனைத் தொடர்ந்து, விழாவிற்காக வைக்கப்பட்டிருந்த பிளக்ஸ் பேனரில் பழனி சட்டமன்ற வேட்பாளரின் பெயர் விடுபட்டது குறித்து அமைச்சரிடம் புகார் தெரிவிக்கப்பட்டது. இதனால் அதிருப்தியடைந்த அமைச்சர், இணை ஆணையர் மாரிமுத்துவை நேரில் அழைத்து, இந்த நிர்வாகக் குறைபாடு மற்றும் தவறு எதனால் நடந்தது என கடுமையாகக் கேள்வி எழுப்பினார். பின்னர் சம்பந்தப்பட்ட சட்டமன்ற வேட்பாளரிடம் பேசிய அமைச்சர், "இனிமேல் இதுபோன்ற தவறுகள் நடக்காது" என உறுதியளித்து நிலைமையை சுமுகமாக்கினார். தொடர்ந்து, பழனி முருகனின் புகழ்பெற்ற பிரசாதமான பஞ்சாமிர்தம் தயாரிக்கப்படும் குடோனுக்குச் சென்ற அமைச்சர் ரமேஷ், அங்கு தயாரிப்பு முறைகள், தரம் மற்றும் தூய்மை குறித்து நேரில் ஆய்வு செய்தார். அதிகாரிகளுக்குப் பல்வேறு ஆலோசனைகளையும் அவர் வழங்கினார். அமைச்சரின் இந்த அடுத்தடுத்த அதிரடி ஆய்வுகளும், உடனடி நடவடிக்கைகளும் பழனி கோவில் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# சிவகங்கை மாவட்டத்தில் டாப்செட்கோ கடன் மேளா: ஜூன் 9 முதல் 23 வரை நடைபெறுகிறது



சிவகங்கை, ஜூன்.9-

சிவகங்கை மாவட்டம் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினரை பல்வேறு கடன் திட்டங்களின் கீழ் பயன்பெறச் செய்வதற்காக, டாப்செட்கோ நிறுவனத்தின் சார்பில் சிவகங்கை மாவட்டத்தின் பல்வேறு வட்டாட்சியர் அலுவலகங்களில் ஜூன் 9 முதல் ஜூன் 23 வரை கடன் மேளாக்கள் நடத்தப்படுகின்றன. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் சிறுதொழில், வணிகம், விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த தொழில்கள் மேற்கொள்ள தனிநபர் மற்றும் குழுக்கடன் திட்டங்களின் கீழ் கடனுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் பயன்பெற விண்ணப்பதாரர்கள் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும். குடும்ப ஆண்டு வருமானம் ரூ.3 லட்சத்திற்குள் இருக்க வேண்டும். 18 வயது முதல் 60 வயதுக்குள் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். தனிநபர் கடன் திட்டத்தின் கீழ் அதிகபட்சமாக ரூ.25 லட்சம் வரை கடனுதவி வழங்கப்படுகிறது. ரூ.1.25 லட்சம் வரை 7 சதவீதமும், அதற்கு மேல் ரூ.25 லட்சம் வரை 8 சதவீதமும் வட்டி விதிக்கப்படுகிறது .குழுக்கடன் திட்டத்தில் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு ஒருவருக்கு ரூ.1.25 லட்சம் வரையும், ஒரு குழுவிற்கு ரூ.25 லட்சம் வரையும் 7 சதவீத வட்டியில் கடனுதவி வழங்கப்படுகிறது. சுய உதவிக்குழு தொடங்கி குறைந்தபட்சம் ஆறு மாதங்கள் நிறைவடைந்திருக்க வேண்டும்.மேலும், பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு இரண்டு கறவை மாடுகள் வாங்க ரூ.1.20 லட்சம் வரை 7 சதவீத வட்டியில் கடனுதவி வழங்கப்படுகிறது.கடன் விண்ணப்பங்களை மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி கிளைகள் அல்லது டாப்செட்கோ இணையதளத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களுடன் சாதி, வருமானம், இருப்பிடச் சான்றிதழ், குடும்ப அட்டை, ஆதார் அட்டை உள்ளிட்ட ஆவணங்களை இணைத்து சமர்ப்பிக்க வேண்டும். கடன் மேளாக்கள் சிவகங்கை (09.06.2026), மானாமதுரை (10.06.2026), திருப்புவனம் (11.06.2026), காளையார்கோவில் (12.06.2026), இளையான்குடி (16.06.2026), திருப்பத்தூர் (17.06.2026), காரைக்குடி (18.06.2026), சிங்கம்புணரி (19.06.2026), தேவகோட்டை (23.06.2026) ஆகிய வட்டாட்சியர் அலுவலகங்களில் நடைபெறுகின்றன. இத்திட்டங்களுக்கு தகுதியுடையோர் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சியர் பொற்கொடி அறிவித்துள்ளார்.



# சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

சிவகங்கை, ஜூன்.9-

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நேற்று (08.06.2026) மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, தலைமையில் நடைபெற்றது.மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், இலவச வீட்டுமனைப்பட்டா, சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் உதவித்தொகை, மாவட்ட ஊனமுற்றோர் மற்றும் மறுவாழ்வுத்துறை உதவித்தொகை மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான உபகரணங்கள், புதிய மின்னணு குடும்ப அட்டை போன்ற பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, பொது மக்களிடமிருந்து 402 மனுக்கள் பெறப்பட்டது. அம்மனுக்களில் தகுதியுடைய மனுக்கள் மீது தனி கவனம் செலுத்தி, விரைந்து நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, அறிவுறுத்தினார்.இக்கூட்டத்தில், மாவட்டவருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி உட்பட அரசின்பல்வேறு துறைகளை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



■ திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் எம்.பி.அமித் நேற்று (08.06.2026) மண்டலம்4, வார்டு29, முருகம்பாளையம் ஓடக்காடு பகுதியில் உள்ள வீடுகளில் தூய்மை பணியாளர்கள் பொதுமக்களிடமிருந்து மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம் பிரித்து வாங்கப்படுவதை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். உடன் மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.



■ மலேசியாவில் மாற்றுத்திறனாளிகளுக்கான Asian Para Throw Ball Championship2026 நடைபெற்ற போட்டியில் இந்திய அணியில் மதுரையைச் சேர்ந்த பூங்கொடி கலந்து கொண்டு மூன்றாம் இடம் பிடித்து வெற்றி பெற்றார் அதனை தொடர்ந்து மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷை சந்தித்து வாழ்த்து பெற்றார். மாவட்ட விளையாட்டு அலுவலர் முருகன் உடன் உள்ளார்.



■ மதுரை மாவட்ட ஆட்சியர் குறைதீர்க்கும் நாளில் மாற்றுத்திறாளிகளுக்கு விலையில்லா இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ் இ.ஆ.ப., வழங்கினார்



■ திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூ கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்வு கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார்,இ.ஆ.ப., இன்று (08.06.2026) பெற்றுக்கொண்டார்கள். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெ.நாராயணன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் டாக்டர். உமாமகேஸ்வரி, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) பூஷணகுமார், உதவி இயக்குநர் ஊராட்சிகள் (தெற்கு) மகாதேவன், மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) முருகேசன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் தணிகாசலம், உதவி ஆணையர் (கலால்) வேடியப்பன், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் தாமரைமணாளன், மாவட்ட பழங்குடியினர் நல திட்ட அலுவலர் செந்தில்குமார் மற்றும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உள்ளனர்.



■ ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு சட்டமன்ற தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எஸ் எம் சுகுமார் நன்றி தெரிவிக்க தொகுதி முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டார் அதனைத் தொடர்ந்து திமிரி ஒன்றியத்துக்கு உட்பட்ட சொரையூர் பகுதிக்கு நன்றி தெரிவிக்க சென்றபோது திடீரென நியாய விலை கடையில் ஆய்வு மேற்கொண்டார். பிறகு பொதுமக்களிடம் உரையாடிய எம்எல்ஏ பொதுமக்கள் வைத்த 100 நாள் வேலை, அரசு தொகுப்பு வீடு வழங்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை எழுப்பினர். அதற்கு தகுதி உள்ள பயனாளிகளுக்கு வீடு வழங்கப்படும் என தெரிவித்தார். இதில் திமிரி கிழக்கு ஒன்றிய செயலாளர் துறையூர் குமார் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.




# பெண் மற்றும் குழந்தைகளை மிரட்டி வீடு சேதப்படுத்தியதாக புகார்: காவல் துறை எஸ்.ஐ. மீதும் நடவடிக்கை கோரி ஆட்சியரிடம் மனு

மதுரை, ஜூன்.9-

மதுரை மாவட்டம், ஒத்தக்கடை அருகே துலுக்கன்குளம் பகுதியைச் சேர்ந்த பஞ்சு (39) என்பவர், தனது குடும்பத்தினருக்கு மிரட்டல் விடுத்து வீட்டை சேதப்படுத்தியதாகவும், சம்பவத்தில் காவல்துறை அதிகாரி ஒருவரும் ஆதரவாக செயல்பட்டதாகவும் குற்றம்சாட்டி மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்துள்ளார்.மனுவில், கடந்த சில மாதங்களாக தாடிக்குமார் மற்றும் அவரது ஆதரவாளர்கள் தங்களது வீட்டிற்கு வந்து இடம் தொடர்பாக மிரட்டல் விடுத்து வந்ததாகவும், கடந்த மே 19ஆம் தேதி பலர் கார்களில் வந்து வீட்டின் கதவை உடைத்து சேதப்படுத்தியதாகவும் தெரிவித்துள்ளார்.மேலும், தன்னை மற்றும் தனது சிறுமி மகளை அவதூறாக பேசி மிரட்டியதுடன், உயிருக்கு ஆபத்தான ஆயுதங்களுடன் கொலை மிரட்டல் விடுத்ததாகவும் குற்றம்சாட்டியுள்ளார். சம்பவத்தின் போது அப்பன்திருப்பதி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் கார்த்திகா அங்கு இருந்தும் நடவடிக்கை எடுக்காமல், எதிர்தரப்பினருக்கு ஆதரவாக செயல்பட்டதாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக புகார் அளித்தும் உரிய நடவடிக்கை எடுக்கப் படவில்லை என்றும், வீடு சேதப்படுத்தியவர்கள் மற்றும் மிரட்டலில் ஈடுபட்டவர்கள் மீது வழக்குப்பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், தனது குடும்பத்திற்கும் சொத்திற்கும் காவல் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.



# நெல் அறுவடைக்கு பின் முளைத்த நெற்பயிர்கள்

## பசுந்தீவனமாக மாறிய வயல்வெளிகள் – ஆடு வளர்ப்போருக்கு இரட்டிப்பு லாபம்

கிருஷ்ணகிரி, ஜூன்.9-

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த மாதம் இரண்டாம் போக நெல் சாகுபடி அறுவடைப் பணிகள் நிறைவடைந்த நிலையில், தற்போது வயல்வெளிகளில் இயற்கையாக முளைத்துள்ள நெற்பயிர்கள் பசுந்தீவனமாக மாறி ஆடு வளர்ப்போருக்கு பெரும் பயனளித்து வருகின்றன.

கிருஷ்ணகிரி மாவட்டத்தின் கே.ஆர்.பி. அணை நீர்ப்பாசனப் பகுதிகளான கால்வே அள்ளி, குண்டலப்பட்டி, மலையாண்டஅள்ளி, திம்மாபுரம்,அவதானப்பட்டி மற்றும் சுற்றுவட்டார கிராமங்களில் இரண்டாம் போக நெல் சாகுபடி செய்யப்பட்டிருந்தது. அறுவடை காலத்தில் இயந்திரங்கள் மூலம் நெல் அறுவடை செய்யப்பட்டு, விவசாயிகள் நெற்கதிர்களை சேகரித்து வீடுகளுக்கு எடுத்துச் சென்றனர்.

இந்நிலையில், அறுவடை செய்யும் போது வயல்களில் கீழே சிதறி விழுந்த நெல் மணிகள் மழை மற்றும் ஈரப்பதத்தின் காரணமாக முளைத்து, தற்போது பச்சை பசேலென வயல்வெளி முழுவதும் வளர்ந்துள்ளன. இதனால் அறுவடை முடிந்த வயல்கள் மீண்டும் பசுமை போர்த்திய காட்சியை அளித்து வருகின்றன.

இந்த இயற்கையாக முளைத்த நெற்பயிர்களை பசுந்தீவனமாக பயன்படுத்தும் வகையில் விவசாயிகள் தங்களது ஆடுகள் மற்றும் கால்நடைகளை வயல்வெளிகளில் மேய்ச்சலுக்கு அனுப்பி வருகின்றனர். குறிப்பாக ஆடு வளர்ப்போர் அதிக அளவில் ஆடுகளை வயல்களில் மேய்த்து வருகின்றனர்.

இதுகுறித்து ஆடு வளர்ப்போர் கூறுகையில், “வயல்வெளிகளில் இயற்கையாக முளைத்துள்ள பசுமையான நெற்பயிர்களை ஆடுகள் விரும்பி மேய்கின்றன. இதனால் ஆடுகளின் உடல் வளர்ச்சி நன்றாக இருப்பதுடன், எடையும் அதிகரிக்கிறது. சந்தையில் ஆடுகளுக்கு நல்ல விலை கிடைப்பதால் வருமானமும் உயர்ந்துள்ளது. தீவனச் செலவும் குறைந்துள்ளதால் கூடுதல் லாபம் கிடைத்து வருகிறது” என்றனர்.

அறுவடைக்கு பின் இயற்கையாக முளைத்த நெற்பயிர்கள் கால்நடை வளர்ப்போருக்கு பயனளிப்பதுடன், பசுமையான வயல்வெளிகள் கிராமப்புறங்களில் கண்கவர் காட்சியையும் ஏற்படுத்தி வருகின்றன.




Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161